பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

14 08 2026 6 45

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நாட்டின் 80-வது சுதந்திர தினம் நாளை கொண்டாடப்படுவதையொட்டி, குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று இரவு ஏழு மணிக்கு நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார்.
- தொகுதி மறுவரையறை குறித்து தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைப் பரிசீலித்து அதற்கேற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பிரதமர் திரு நரேந்திர மோடியை முதலமைச்சர் திரு ஜோசப் விஜய் கேட்டுக்கொண்டுள்ளார்.
- நாடாளுமன்றத்தில் இன்னமும் முன்மொழியப்படாத தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு எதிராக அவசர அவசரமாக சட்டப்பேரவையில் தீர்மானம் கொண்டு வந்தது, மடைமாற்று அரசியல் என பிஜேபி மாநில தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.
- தமிழகத்தில் சுற்றுலாவை மேம்படுத்த தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு ராஜேஷ்குமார் கூறியுள்ளார்.
- தமிழ்நாடு பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் நெல்லை, திருச்சி அணிகள் வெற்றி பெற்றன.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாட்டின் 80-வது சுதந்திர தினம் நாளை கொண்டாடப்படுவதையொட்டி, குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று இரவு ஏழு மணிக்கு நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார்.

குடியரசுத்தலைவரின் உரை ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷனின் அனைத்து அலைவரிசைகளிலும் ஹிந்தியிலும், ஆங்கிலத்திலும் ஒலிபரப்பாகிறது.

அதைத் தொடர்ந்து குடியரசுத்தலைவரின் உரை, மாநில மொழிகளில் தூர்தர்ஷன் தொலைக்காட்சியின் பிராந்திய அலைவரிசைகளில் ஒலிபரப்பாக உள்ளது.

அத்துடன் குடியரசுத்தலைவரின் உரை ஆகாஷ்வாணியின் பிராந்திய அலைவரிகைளில் இரவு மணி 9.30க்கு மாநில மொழிகளில் ஒலிபரப்பாகும்.

<<<<>>>>

தொகுதி மறுவரையறை குறித்து தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைப் பரிசீலித்து அதற்கேற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பிரதமர் திரு நரேந்திர மோடியை முதலமைச்சர் திரு ஜோசப் விஜய் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில், தமிழக சட்டப்பேரவையில் 12ஆம் தேதி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் மக்களவையின் தற்போதைய உறுப்பினர்களின் எண்ணிக்கையை மாற்றாமல் அதே நிலை தொடர வேண்டும் என்று முதலமைச்சர் கூறியுள்ளார்.

இந்த எண்ணிக்கையின் அடிப்படையில் மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீட்டை அடுத்து வரும் நாடாளுமன்ற தேர்தலிலேயே நடைமுறைப்படுத்த உரிய அரசியலமைப்பு சட்டத் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு அக்கடிதத்தில் முதலமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

நாடாளுமன்றத்தில் இன்னமும் முன்மொழியப்படாத தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு எதிராக அவசர அவசரமாக சட்டப்பேரவையில் தீர்மானம் கொண்டு வந்தது, மடைமாற்று அரசியல் என பிஜேபி மாநில தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்த தீர்மானத்திற்கு எதிராக பிஜேபி உறுப்பினர் வாக்களித்தார் என்பதற்காக அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜுனா கேலி பேசியது கண்டனத்திற்குரியது என்று தெரிவித்துள்ளார்.

தொகுதி மறுவரையறை செய்யப்பட்டால் தமிழகத்தில் மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 39லிருந்து 59ஆக அதிகரிக்கும் எனவும், தமிழகத்தின் பிரதிநிதித்துவம் 7 புள்ளி இரண்டு மூன்று சதவீதமாக இருக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அனைத்து மாநிலங்களுக்கும் 50 சதவீத உயர்வு கிடைப்பதால் யாருக்கும் பாதகம் இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதை எதிர்ப்பது அறியாமை என்றும், தொகுதி மறுவரையறையை கைவிட வேண்டும் என்று கூறுவது தமிழக மக்களின் குரலை முடக்க வழிவகுக்கும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தொகுதி மறுசீரமைப்பால் தமிழகத்தில் தொகுதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதுடன் பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தொகுதி மறுசீரமைப்பு தேவை என்பதே பாமகவின் நிலைப்பாடு என்றார்.

மூன்று மாதங்களுக்கு முன்பு நியாயமான தொகுதி மறுசீரமைப்பு தேவை என்று கூறிய காங்கிரஸ் கட்சி, தற்போது தொகுதி மறுசீரமைப்பே தேவையில்லை என்று நிலைப்பாட்டை மாற்றியிருப்பது ஏன் என்று திரு. அன்புமணி ராமதாஸ் கேள்வி எழுப்பினார்.

<<<<>>>>

அரசின் வளர்ச்சித் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் செய்தியாளர்களின் பணி முக்கியமானது என பத்திரிகை தகவல் அலுவலகத்தின் தென் மண்டல தலைமை இயக்குநர் திரு. பழனிச்சாமி கூறியுள்ளார்.

ராணிப்பேட்டையில் நடைபெற்ற ஊடகவியலாளர்களுக்கான சிறப்பு பயிலரங்கில் பேசிய அவர், அரசு ஏராளமான நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதாகத தெரிவித்தார்.

<<<<>>>>

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 9 பேரை விடுவிக்க மத்திய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மாநில அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பாக முதலமைச்சர் திரு. விஜய், வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருக்கு எழுதியுள்ள கடிதத்தில் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

தற்போது மொத்தம் 49 மீனவர்கள் இலங்கை சிறைகளில் உள்ளதாகவும், அவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவிக்க உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் சுற்றுலாவை மேம்படுத்த தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு ராஜேஷ்குமார் கூறியுள்ளார்.

கோவையில் சுற்றுலாத்துறை மேம்பாடு குறித்து நடைபெற்ற மாநாட்டுக்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சுற்றுலாத் துறை மேம்பாட்டுக்கு பட்ஜெட்டில் அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டின் 80வது சுதந்திர தினத்தை ஒட்டி BSNL சிறப்பு சலுகைகளை அறிமுகப்படுத்தியுள்ளதாக மதுரை வட்ட பொது மேலாளர் திரு. லோகநாதன் கூறியுள்ளார்.

மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதனைத் தெரிவித்தார்.

<<<<>>>>

சென்னையில் சொத்து வரி மாற்றம் நிறுத்தி வைக்கப்படுவதாக மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட தொடர் கோரிக்கைகளை அடுத்து இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாநகராட்சி ஆணையர் திரு. சமீரன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

பாகிஸ்தானில் கைபர் பக்தூன்வா மாகாணத்தில் பாதுகாப்புப் படையினருடன் ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டையில் 15 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

<<<<>>>>

மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு கிரிராஜ் சிங், புதுதில்லியில் கைத்தறிச் சந்தை மையத்தை இன்று திறந்து வைக்கிறார்.

<<<<>>>>

மூத்த குடிமக்களுக்கான தேசிய கவுன்சிலின் 5-வது கூட்டம் மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் திரு வீரேந்திர குமார் தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

<<<<>>>>

விண்வெளிக் கழிவுகளைக் குறைக்கவும், அதைத் தடுக்கவும் உரிய நடவடிக்கைகளை இஸ்ரோ மேற்கொண்டுள்ளதாக மத்திய விண்வெளித்துறை இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

<<<<>>>>

நாடு முழுவதும் 5 லட்சத்து 63 ஆயிரம் கிராமங்களில் திரவக் கழிவு மேலாண்மை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக ஜல் சக்தித்துறை இணையமைச்சர் திரு சோமண்ணா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

சிவகாசி அருகே பட்டாசு தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் நிவாரண நிதியில் இருந்து தலா 4 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

<<<<>>>>

சென்னையில் உள்ள அரசு மைய அச்சகத்தில் மாநில அமைச்சர் திரு ராஜ்மோகன் ஆய்வு மேற்கொண்டார்.

<<<<>>>>

மை பாரத் சார்பில் இல்லம்தோறும் தேசியக்கொடி இயக்கத்தை முன்னிட்டு விழுப்புரத்தில் கல்லூரி மாணவிகள் பங்கேற்ற தேசியக்கொடி பேரணி நடைபெற்றது.

<<<<>>>>

சென்னையில் கடந்த 3 நாட்களில் 6 ஆயிரத்து எண்ணூற்று தொன்னூற்று மூன்று தெரு நாய்களுக்கு ரேபிஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

தமிழ்நாடு பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் நெல்லை, திருச்சி அணிகள் வெற்றி பெற்றன.

திண்டுக்கல்லில் நேற்று நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் நெல்லை அணி 2 விக்கெட் வித்தியாசத்தில் கோவை அணியை வென்றது.

பின்னர் நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் திருச்சி அணி, 17 ரன் வித்தியாசத்தில் திருப்பூர் அணியை வென்றது.

இன்று நடைபெறும் ஆட்டங்களில் திண்டுக்கல் அணி - சேலம் அணியையும், சேப்பாக்கம் அணி - மதுரை அணியையும் எதிர்கொள்கிறன.

<<<<>>>>

மாமல்லபுரத்தில் நடைபெற்று வரும் உலக அலைச்சறுக்குப் போட்டியில், ஜப்பான் வீரர்கள் அதிக வெற்றிகளைப் பெற்று முன்னிலையில் உள்ளனர்.

<<<<The End>>>>